

ஆசிரியரிடமிருந்து........!

# வழிநடத்தும் கர்த்தர்

"உன்னை வழிநடத்துகிற
உன் தேவனாகிய கர்த்தர் நானே"
ஏசாயா 48:17

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் நம்மை வழிநடத்தும் நல்ல மேய்ப்பராகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நம்முடைய கர்த்தர் நம்மை வழிநடத்துகிற கர்த்தர். வேதம் முழுவதும் தேவன் எப்படி தேவ மனிதர்களையும், தேவ ஜனங்களையும் வழிநடத்தினார் என்பதை வாசிக்க முடியும். இந்த செய்தியில், நம்முடைய வாழ்க்கையில் தேவ வழிநடத்துதலின் அவசியம் குறித்தும், தேவன் எவ்விதம் நம்மை வழிநடத்துகிறார் என்பது குறித்தும் சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவ வழிநடத்துதலின் அவசியம்
## The MUST of God's Guidance

வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் (குடும்ப சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, ஊழிய சூழ்நிலை) நாம் தடுமாறும்போது, வழி தெரியாமல், செய்வது இன்னதென்று அறியாமல் கவலைப்படுகிறோம். ஆகவேதான் தீர்க்கதரிசி, 'மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்' என்று கூறுகிறார் (எரே.10:23). இத்தகைய தடுமாற்றம் நிறைந்த வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிகவும்அவசியம். இல்லையேல் நாம் வழிதப்பி, தேவத் திட்டத்தை விட்டு விலகி சென்றுவிடுவோம் (ஏசாயா 53:6). நம்முடைய கர்த்தர் நல்ல மேய்ப்பனாக நம்மை வழிநடத்துகிறவராய் இருக்கிறார் (சங்.23:3). தாவீதைப் போல, "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" (சங்.27:11) என்று நாமும் ஜெபிப்போமானால் கர்த்தர் நம்மையும் நடத்துவார்.

## 2. தேவ வழிநடத்துதலின் விதம்
## The MANNER of God's Guidance

### நித்தமும் நடத்துவார்:

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்" (ஏசாயா 58:11).

நம்முடைய கர்த்தர் நம்மை வாழ்நாள் முழுவதும் வழிநடத்த வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நித்தமும், தினமும் நடத்துவார் (ஏசாயா 58:11). இஸ்ரவேல் ஜனங்களை 40 ஆண்டுகள் இரவும் பகலும் அவர்கள் முன் சென்று வழிநடத்தினார் என்று வேதம் கூறுகிறது (சங்.78:14; நெகே.9:12;19;யாத்.13:21). அவர்கள் தேவைகள் அனைத்தும் சந்தித்து அவர்களை நடத்தினார் (ஏசாயா 48:21). இந்த தேவன் சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார் என்று சங்கீதக்காரன்

கூறுகிறார் (சங்.48:14). ஆம் பிரியமானவர்களே, தேவன் ஒவ்வொரு நாளும் உங்கள் தேவைகளை சந்தித்து, வறட்சி வந்தாலும் உங்களை நடத்தி உங்களை திருப்தியாக்குவார். நீங்கள் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல இருப்பீர்கள்!

**நேர்வழியில் நடத்துவார்:**

"என்னை நேர்வழியாய் நடத்தி வந்த தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்" (ஆதி. 24:48).

ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் தேடுவதற்காக தன்னுடைய ஊழியக்காரன் எலியேசரை அனுப்பியபோது ஆண்டவர் அவரை நேர்வழியாய் நடத்தி, ரெபெக்காளை தெரிந்தெடுக்க கிருபை செய்தார். ஆபிரகாமின் மனவிருப்பங்களையும் நிறைவேற்றினார். எலியேசரின் ஜெபத்தையும் கேட்டு ஆச்சரியமாய் காரியங்களை வாய்க்கப்பண்ணினார் (ஆதி.24:12,48,56). நாமும் நமக்காகவும் நம் பிள்ளைகளுக் காகவும் தேவ வழிநடத்துதலை கேட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் நிச்சயம் நம்மையும் நேர்வழியாய் நடத்தி, காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

**நித்திய வழியில் நடத்துவார்:**

'நித்திய வழியிலே என்னை நடத்தும்' (சங்.139:24). 'நீதியின் பாதைகளில் என்னை நடத்துகிறார்' (சங். 23:3).

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் என்று வேதம் கூறுகிறது (நீதி.14:12; 16:25). தேவ வழிநடத்துதலை நாடாமல் நம்முடைய சுய வழியில் சென்றால் முடிவு விபரீதமாக இருக்கும். ஆகவே நாம் நம்முடைய சுயபுத்தியின்மேல் சாயாமல், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து அவருடைய வழிநடத்துதலை நாடுவோம். அவர் நம்மை செவ்வையான வழியில், சத்தியத்தின் வழியில், நித்திய வழியில் பத்திரமாய் நடத்துவார் என்று வேதம் கூறுகிறது (வாசியுங்கள் நீதி. 3:5,6; சங். 25:5; 78:53; 107:7).

## 3. தேவ வழிநடத்துதலின் முறைகள்
## The METHODS of God's Guidance

தேவன் தம்முடைய ஜனங்களை பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வழிநடத்துகிறார். அவைகளை சுருக்கமாக கீழே விளக்க விரும்புகிறேன்.

**1. கர்த்தருடைய வார்த்தை:**

தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார். கர்த்தருடைய வசனமே நம்முடைய கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105). வேதம்தான் இந்த பூமிக்குரிய நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நமக்கு வழிகாட்டியாகவும், திசை காட்டியாகவும் இருக்கிறது. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களோடு பேசி வழிநடத்துவார் (ஏசாயா 30:21). ஆகவே அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசித்து, தேவனுடைய சத்தத்தை கேட்க பழகுவோம்! என் ஆடுகள் என் சத்தத்தை அறிந்திருக்கிறது, செவிகொடுக்கிறது, எனக்குப் பின்செல்லுகிறது என்று இயேசு கூறினார் (யோவான் 10:3, 4,27).

**2. பரிசுத்த ஆவியானவர்:**

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நம்மை வழிநடத்துகிறார். 'உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக' என்று தாவீது ஜெபிக்கிறார் (சங்.143:10). இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் தம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டு அவர்களை நடத்தி வந்தார் (நெகே.9:19,20). சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று இயேசு கூறினார் (யோவான் 16:13;14:26). பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் பாதையிலே அப்போஸ்தலர்களை வழி நடத்தினார் (அப்.10:19,20; 3:2;16:7). சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவிச் செய்தார் (அப். 15:29). நமக்கும் அப்படியே செய்வார்!

ஆவியானவர் ஒருபோதும் வசனத்திற்கு மாறாக வழிநடத்தமாட்டார். சிலர் இன்று ஆவியானவர் பேசினார் என்று கூறி தெளிவான வேத ஆலோசனைகளுக்கு விரோதமாக செயல்படுகின்றனர். இது தவறானது, ஆபத்தானது. மேலும் சொப்பனத்தின் மூலமோ, தீர்க்கதரிசனத்தின் மூலமோ உங்களிடம் யாராகிலும் பேசினால், வேத வசனத்திற்கு ஒத்திருக்கிறதா? என்று சோதித்துப்பார்க்க வேண்டும் (1 யோவான்4:1). இல்லாவிடில், தவறாக நடத்தப்பட அதிக வாய்ப்புகள் உண்டு. கவனம்!.

**3. பரிசுத்தவான்களின் ஆலோசனை:**

பரிசுத்தவான்களின் ஞானமுள்ள ஆலோசனைகளைக் கொண்டும் தேவன் நம்மை வழி நடத்துகிறார். ஆலோசனையில்லாத இடங்களில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் (நீதி.11:14). ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் (நீதி.12:15). ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்தில் ஞானமுண்டு (நீதி. 13:10). ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் எண்ணங்கள் உறுதிப்படும் (நீதி. 15:22; 20:18). ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி.24:6) என்றெல்லாம் வேதம் நமக்கு கூறுகிறது. ஆகவே ஒரு காரியத்தை செய்வதற்கு (வேத வசன வெளிச்சத்தோடுக்கூட) பெற்றோர்கள், ஆவிக்குரிய அனுபவமுள்ள போதகர்கள், மூத்த தேவப்பிள்ளைகளின் ஆலோசனைகளை கேட்பது வாழ்க்கையில் சரியான வழிநடத்துதலை பெறவும், நல்ல முடிவுகளை எடுக்க மிகவும் உதவிடும். ஜனங்களை பாரமின்றி நியாயம் விசாரித்து வழிநடத்த எத்திரோவின் ஆலோசனை மோசேவுக்கு மிகவும் உதவியாயிருந்தது (யாத்.18:14-20). நாத்தானின் ஆலோசனை தாவீதுக்கு சரியான நேரத்தில் கிடைத்தபடியால் சாலொமோனை தனக்கு பின் சிங்காசனத்தின் மேல் அமர்த்த முடிந்தது (1 இராஜா. 1:11-12).

**4. சூழ்நிலைகள்:**

தேவன் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளைக் கொண்டும் சில சமயங்களில் நம்மை வழிநடத்துகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவின் சில பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்ய தீர்மானித்திருக்கும்போது, தேவன் அங்கு செல்வதற்கான வாசல்களை அடைத்தார் (அப்.16:6-7). பவுலைக் கொண்டு ஐரோப்பா கண்டத்திற்கு சுவிசேஷம் செல்ல வேண்டும், சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் திட்டம் வைத்திருந்தார் (அப்.16:9-40). தேவன் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு சில வாசல்களை அடைக்கிறார். சில வாசல்களை திறக்கிறார் (1கொரி. 16:9)!

மேலும் சில நேரங்களில் நாம் கடினப்பட்டு தவறான வழியில் செல்லும்போது, சூழ்நிலைகள் மூலம் நம்மோடு பேசி சரிப்படுத்துகிறார். பிலேயாமை கழுதையைக் கொண்டு எச்சரித்தது இதற்கு உதாரணமாக இருக்கிறது (எண். 22:25-32).

ஆம், பிரியமானவர்களே, நம்முடைய தேவன் நம்மை இந்த வாழ்க்கைப் பயணத்தில் அற்புதமாக வழிநடத்த ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் உங்கள் வழியை அவருக்கு ஒப்புவித்து, **'கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையில் என்னை நடத்தும்'** (சங்.37:5; 27:11) என்று தினமும் ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் நித்தமும் நடத்துவார்! நீங்கள் உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் (யோவேல் 2: 26)! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி